**கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் - 2018**
---------------------------------------------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**
-----------------------------------------------

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஐந்தொகை அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் செலவுகள் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதி கூற்றுக்கள் தொடர்பாக குறிப்புக்கள் பொழிப்பாக்கி முக்கிய கண்கக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| | உரிய நியமத்துடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று ஒன்று சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 1 இன் 70 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறை சொத்துக்கள் திரவத் தன்மை தொடர்முறையில் வரிசைப்படுத் தப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சலுக்காக தாக்கம் ஏற்படுத்தி தாக்கம் ஒன்றினை ஏற்படுத்தாத முன்னைய ஆண்டில் நடைபெற்ற பிழையினை சரி செய்வதற்வாக ரூபா 302,906 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதித் தொழிற்பாடு களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தவறுதல் காரணமாக திரண்ட மிகை வித்தியாசம் நிதி தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டி ருந்ததுடன் நடைமுறை ஆண்டு முதல் சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமங் களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 2 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 13,369,418 தொகைக்கான முதலீடுகள் மீதான வட்டி பெறுவனவுகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீடுகள் காசுப் பாய்ச்சல் ஒன்று என தனியாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.<br>மேலும் நிதியத்தின் நிலையான வைப்புக்கள் முதலீடுரூபா 91,079,852 தொகை எனினும், அது முதலீட்டு அலுவல்கள் இருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் என ரூபா 56,000,000 தொகை மற்றும் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் காசுப் பாய்ச்சல் என ரூபா 35,079,852 தொகை காட்டப்பட்டிருந்தது. | நடைமுறை ஆண்டு முதல் முதலீட்டு வட்டி காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இல் 65 பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பயன்தரு வாழ்க்கை காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப் படாமையினால் ரூபா 4,755,627 இற்கான 08 நடைமுறையல்லாத சொத்து விடயங்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்திருந்த போதிலும் நிதியத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் காணப்பட்ட மதிப்பீட்டு வழுவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் குறிப்பிட்ட சொத்துக்களை இனங்கண்ட பின்னர் மீள் மதிப்பீடு செய்து எதிர்காலத்தில் கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு அரச வங்கி ஒன்றில் இருந்து கிடைத்திருந்த உதவி ரூபா 4,400,000 தொகை ஆண்டிற்கான உதவி பெறல் என கூட்டுறவு தின விழா செலவுகளில் இருந்து கழித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இந்த மக்கள் வங்கியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 4.4 மில்லியன் தொகை 97 ஆவது கூட்டுறவு தின கொண்டாட்டத்திற்கான செலவுகளுக்காக வழங்கியிருந்ததுடன் அதன் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப் பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2008 ஆண்டின் போது சேர்க்கப் பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 126,700 இற்கான பணிக்கொடை ஒதுக்கம் மேற் கொண்டிருக்கவில்லை. | நடைமுறை ஆண்டு முதல் பணிக்கொடை ஒதுக்கம் மேற்கொள்ளப் பட்டு கணக்குகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பணிக்கொடை ஒதுக்கம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

| விடயம் | நிதிக் கூற்று க்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கை யின் பிரகாரம் | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| பெற வேண்டிய கூட்டுறவு சங்க கடன் வட்டி | 7,907,686 | 7,014,825 | 892,861 | விபரங்கள் பெற்றுக் கொள்ளும் வசதி யின்மையினால் தீர்ப்பதற்கு முடியாதி ருந்தது. வித்தியாசம் தொடர்பாக சங்கங் களை அழைத்து இணக்கத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | | |
| விவசாய நிதியம் மிகை | 14,503,854 | மீதிகளை உறுதிப்படுத்தல் | விவசாய நிதியத்தை முடிவுறுத்தும் போது கூட்டுறவு நிதியத்திற்கு மாற்றியுள்ள மீதியாகும். | -- |
| கூட்டுறவு சங்க கடன் (விவசாய நிதியம்) | 12,860,953 | மீதிகளை உறுதிப்படுத்தல் | பல வருடங்கள் பழமையான கடன் மீதியாக காணப்படுவதுடன் மற்றும் உரிய சொத்துக்கள் மற்றும் செயற்படும் சங்கங்களை இனங்கண்ட பின்னர் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதிகளை உறுதிப்படுத்தல் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| கடன் பெற்றுக் கொள்ளல் ஊவா மாகாணம் | 5,439,905 | மீதிகளை உறுதிப்படுத்தல் | மீதிகளை உறுதிப்படுத்தல்களை பெற்று விரைவாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | -- |

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து

விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு

பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது

தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

## 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

## 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 1997 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 2,666,000 தொகைக்கான கூட்டுறவு பாடசாலைக்கான கடன், 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 1,999,600 தொகைக்கான செயலாற்றுகை முற்பணம் மற்றும் ரூபா 1,184,000 தொகைக்கான நீதிமன்ற நட்டஈடு | கூட்டுறவ பாடசாலைகள் கடன் மற்றும் செயலாற்றுகை முற்பணம் உரிய விபரங்கள் பெற்றுக் கொள்வதின் கடினத்தின் காரணத்தினால் தீர்ப்பதற்கு முடியாதிருந்ததுடன் விபரங்கள் பெற்ற பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | வ/ப கொபெய்கனே பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினைநவீன மயப்படுத்தலுக்காக 2012 ஆண்டின் போது ரூபா 3,000,000 தொகை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதி வரை கடன் தொகை திருப்பிச் செலுத்தி முடிவடைய வேண்டியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 திகதி வரை இந்த கடன் தொகையில் ரூபா 2,983,090 தொகை மற்றும் ரூபா 1,516,387 இற்கான கடன்வட்டி ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பிணை மேவகை உடன்படிக்கை ஒன்று அணுகுவதற்கு மற்றும் காப்புறுதி மேவகை ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த துடன் உடன்படிக்கை மேற் கொள்ளவும் காப்புறுதி மேவகை ஒன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பிரதேசங்களில் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளுக்காக மாகாண ஆணையாளர் கருத்தரங்குகளில் தொடர்ச்சியாக மாகாண ஆணையாளர்களுக்கு அறிவூட்டியிருந்ததுடன் அதன் பிரகாரம், விரைவாக இந்தக் கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1999 மற்றும் 2000 ஆண்டுகளின் போது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவு திணைக்களத்திற்கு முறையே ரூபா 15,000,000 தொகை மற்றும் ரூபா 4,500,000 தொகை கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. கடன்தொகை வழங்கப்பட்டு 20 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அவற்றில் ரூபா 14,575,000 இற்கான மற்றும் ரூபா 4,475,000 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதுடன் அறவிடப்பட வேண்டிய கடன் வட்டி ரூபா 3,810,000 தொகையாக காணப்பட்டது. | | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | வ/ப இறப்பர் கூட்டுறவு சங்கத்திற்கு 1987, 1989 மற்றும் 1990 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த மொத்தம் ரூபா 2,750,000 இற்கான கடன் தொகையில் 2018 திசெம்பர் 31 திகதி வரை 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும் ரூபா 1,849,634 தொகை மற்றும் அத் திகதியில் உள்ளவாறு கடன் வட்டி ரூபா 147,971 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு சமர்ப்பித்து அதன் தீர்மானத்தினை பிரகாரம் விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தற்போது செயற்படாத சங்கம் ஒன்றாக இனங்கண்டிருந்த இலங்கை பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்க சம்மேளனத்துக்காக 2002 ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகை கடன்தொகையொன்று வழங்கியிருந்ததுடன் 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த பணத்தில் தவணைப் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்த சங்கத்திடம் இருந்து ரூபா 240,000 இற்கான கடன் வட்டித் தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | பொறுப்புக்களை தீர்த்து விரைவில் ஒழுத்தலுக்கான அலுவல்கள் முடிவாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 54 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 43,809,281 தொகைக்கான மொத்த கடன் தொகையில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 16 வருடங்கள் முதல் 54 வருடங்கள் வரை காலவீச்சில் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 34,303,581 தொகையாக இருந்தது. மீளாய்வாண்டளவில் அவற்றின் கடனைத் திருப்பி செலுத்தும் செயற்படும் சங்கங்கள் இரண்டு மாத்திரம் காணப்பட்டது. | கடன்தொகையை மீண்டும் மீளாய்வு செய்து நிதி முகாமைத்துவ குழுவுக்கு சமர்ப்பித்து அதன் மூலம் கிடைக்கும் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 188(2) | 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 300,000 தொகையினை வைப்புச் செய்யப்பட்ட ஆனால் தேறப்படாத 02 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | நடைமுறை ஆண்டில் விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிப் பிரமாணங் களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 19,742,511 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,420,879 தொகை ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,678,368 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. பங்களிப்புத் தொகை வருமானம் ரூபா 7,508,189 இனால் குறைவடைதல் மற்றும் செயற்பாட்டு செலவுகள் ரூபா 2,247,578 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக தாக்கியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 62,557,658 தொகைகள் பெறவேண்டிய பங்களிப்புத் தொகை மீதியில் 4 வருடங்களை விட பழமை வாய்ந்த மீதி ரூபா 25,944,056 தொகையாக காணப்பட்டதுடன், 01 வருடம் முதல் 04 வருடங்கள் இடைப்பட்ட காலப் பகுதியில் கிடைக்க வேண்டிய மீதி ரூபா 36,613,601 தொகை காணப்பட்டது. அவற்றில் 13 கூட்டுறவு சங்கங்களில் இருந்து 2015 ஆண்டு முதல் பங்களிப்புத் தொகை எதுவும் அறவிடப்பட்டிருக்காததுடன், அந்த மீதி ரூபா 24,172,353 தொகை ஆகும். அதே போல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய பங்களிப்புத் தொகை மீதியில் ரூபா 30,499,383 தொகை அதாவது 48.8 சதவீதம் வ/ப கல்வி கூட்டுறவு சங்கத்திடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | கணக்காய்விற்கு தொடர்பாக தேவையான தகவல்கள் வழங்குவதற்கு சங்கங்களுக்கு இயலாமையினால் கணக்காய்வு தாமதம் அடைந்துள்ளது. அதே போல் 2013 ஆண்டிற்கான கணக்குகள் திணைக்களத்திற்கு 2015 ஆண்டிலேயே கிடைத்திருந்ததுடன் 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்கான கணக்குகள் 2018 ஆண்டில் கிடைத்திருந்தன. அதன்படி கணக்காய்வு தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். மேலும் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்காக கணக்காய்வுகள் 2019.06.30 அளவில் இயல்பு நிலைக்கு மாறியுள்ளன. | கூட்டுறவு சங்கங்களில் கணக்காய்வுகள் உரிய தினத்தில் பூர்த்தி செய்து பங்களிப்புத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 நிதியத்தின் குறை பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது INFOR COOP செயற்திட்டத்திற்காக திணைக்களத்தில் இருந்து ரூபா 4,291,000 தொகை பயன்படுத்தப்படாமல் நிதியத்தின் பொறுப்பு ஒன்றென தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பெறுகை அலுவல்களுக்காக ரூபா 4,291,000 இற்கான தொகை பயன்படுத்துவதற் காக எதிர்பார்ப்பதெனவும் ரூபா 170 மில்லியனிற்கான ஆரம்ப கிரயத்தின் முதலாம் ஆண்டிற்கான கிரயத்திற்கு அங்கீகாரம் கிடைத்திரு க்காமையினால் செயற்திட்டத்தின் அலுவல்கள் தாமதமடைய காரணமாக இருந்தது. | திணைக்களத்தில் இருந்து கிடைத்தி ருந்த பணம் உரிய கருமங்களுக்கு குறிப்பிட்ட காலம் வரையுள்ஈடுபடுத்தப் பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வங்கி நடைமுறைக் கணக்கில் ஒவ்வொரு மாத இறுதியிலும் ரூபா 2 மில்லியனை விட கூடிய மீதியொன்று காணப்பட்டதுடன், அந்த மீதியின் வருடாந்த சராசரி ரூபா 8,871,941 தொகை ஆகும். அதன் பிரகாரம் மாதாந்தச் செலவுத் தேவையை எதிர்வுகூறி மிகைப் பணத்தினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சில சந்தர்ப்பங்களை கொடுப்பனவு அலுவல் களுக்கு கணக்கில் பணம் தடுத்து வைக்கப்படுவதுடன் ஏனைய சந்தர்ப்பங்களில் மிகைப் பணம் நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |